


SUN Printer திகோடு. 97500 20222

# விடியல்

பொழுது -89
செப்டம்பர் 2016

THE DAWN மாத இதழ்



## ஆசிரியர் தினம்

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA
Knowledge is Power

விடியல் மாத இதழ் (தனிச்சுற்றுக்கு மட்டும்)
வெளியீடு: தமிழ்த்துறை
கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு - 637 215, தமிழ்நாடு, இந்தியா.
*fb* : facebook.com/ksrcasthamizh.vidiyal
*Blog* : ksrcasthamizh.blogspot.in
*Email* : vidiyalmagazhine@gmail.com
*Website* : ksrcas.edu

விடியல்
September 2016

# விடியல்

## The Dawn

இதழ்-89, செப்டம்பர்-2016



கௌரவ ஆசிரியர்

முனைவர் வே. இராதாகிருஷ்ணன்

கல்லூரி முதல்வர்

ஆசிரியர்

முனைவர் சி. ஆர். சுரேஸ்

துறைத்தலைவர்

இணையாசிரியர்

முனைவர் ம.லோகேஸ்வரன்

ஆசிரியர் குழு

திரு. வீ. முருகானந்தம்

முனைவர் த. கண்ணன்

திருமதி. சு. சாந்தி

திரு. ப. ராஜேஷ்

முனைவர் து. சரஸ்வதி

முனைவர் பா. ராஜேஷ்

முனைவர் கோ. ரவிச்சந்திரன்

முனைவர் ந. சங்கீதா

திரு. செ. தங்கராஜ்

திரு. மு. சதீஸ்குமார்

முனைவர் சு. முப்பிடாதி

முனைவர் ப. பிரதிபா

திரு. சத்தியராஜ்

திரு.சிலம்பரசன்


## தலையங்கம்

கவுன்சிலிங் கமிட்டி, ஒழுக்கக் கமிட்டி, தேர்ச்சிக் கமிட்டி என்று மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு சில கல்லூரிகள் மேற்கண்ட கமிட்டிகளை நடத்திக் கொண்டிருக்கின்றன. சில கல்லூரிகள் கற்பித்தலை மட்டும் பிரதான நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன. உண்மையில் கல்வி என்பது ஒரு சமூகத்தின் மீதான பொறுப்புகளையும் தனது பங்களிப்பு யாது என்பதையும் கற்பித்தலே ஆகும்.

ஆனால் மெக்காலேயின் கல்வித் திட்டத்தைத் தலையில் தூக்கிக் கொண்டு கொண்டாடுகின்றோம். தான் வாழும் நாட்டிற்கோ சமூகத்திற்கோ பயன்படாத கல்வி


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)



வெளியீடு:

**தமிழ்த்துறை,**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி** (தன்னாட்சி)

**திருச்செங்கோடு—637215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal

**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com

**Website:** ksrcas.edu



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher

கல்வியே அல்ல என்பர். குருகுலக்க கல்விமுறை ஒருவகையான இனச்சார்புடையது என்று கூறுவர். இருப்பினும் அதில் கற்றல் கற்பித்தலைத் தாண்டி ஒழுக்கநீதியான அறம் போதிக்கப்பட்டு வந்தது. மனனம் செய்யும் முறையால் நினைவாற்றல் பெருகி கற்பித்தலில் தேர்ச்சி இருந்தது. தேர்ச்சி என்றால் இன்றைய தேர்வுக் கண்ணோட்டம் அல்ல. முற்றிலுமான தேர்ச்சி.

காகிதங்களும் அச்சு இயந்திரங்களும் வந்து பழைய கற்றல் கற்பித்தல் முறையை மாற்றியமைத்து விட்டன. அன்றைய மனனத்தில் நேர்த்தி இருந்தது. வாழ்வாதாரப் பின்னணி இருந்தது. இன்றைய மனனத்தில் மதிப்பெண்ணைத் தவிர வேறு ஒன்றுமில்லை. ஆசிரயர் மாணவர் பற்றிய புனிதக் கதைகள் ஏராளம் இருந்தன. இன்று ஆசிரிய மாணவர்களின் உரையாடல்களை வைத்து நகைச்சுவை செய்வதும், கொச்சைப்படுத்துவதுமான செயல்களே நடைபெறுகின்றன. அன்று ஆசிரியர் அமர்ந்திருப்பார். மாணவர்கள் எழுந்து நிற்பர். இன்று ஆசிரியர் கட்டாயம் நிற்க வேண்டும். மாணவர்கள் அமர்ந்திருக்கலாம். அன்று ஆசிரியர் மாணவர்களின் நலனில் அதிக அக்கறை கொண்டிருந்தனர். இன்றும் இருந்தாலும் மாணவரை வேலை வாங்குவதில் அதிகக் கவனம் செலுத்துகின்றனர்.

இவ்வாறு ஆசிரியர் மாணவர் நிலைப்பாட்டினை சொல்லிக்கொண்டே போகலாம். நோக்கம் அதுவன்று மாணவர்களின் நலனில் அதிகம் ஆசிரியர்கள் கவனம் செலுத்துவதில்லை. மாணவர்களை அடிக்கக் கூடாது என்கிற சட்டத்தினால் பலரும் மாணவர்களின் ஒழுக்கம் சார்ந்த முன்னேற்றத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள

விரும்பவில்லை. மாணவர்களை அடித்துத்தான் அவர்களை நல்வழிப்படுத்த முடியும் என்றில்லை. அக்காலத்தில் மாணவர்களை அடிப்பது என்பது ஒரு முக்கியத்துவம் பெறவில்லை. பின்னர் எங்கு இந்த சிக்கல் எழுந்தது? அதற்குக் காரணமும் ஆசிரியர்களாக இருக்கலாம். வெறும் கல்வியை மட்டும் ஒரு மணி நேரத்தில் போதித்து அல்லது ஒப்பித்துவிட்டுச் செல்வதால் யாதொரு பயனும் இல்லை. நாட்டு நடப்புகளை, அரசியல் பிரச்சனைகளை, சமூகப் பொறுப்புகளை நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் மாணவன் காதில் போட்டு வைக்க வேண்டும்.

வலிந்து திணிக்கும் எதுவும் மனதில் இருப்பதில்லை என்பது வரலாறு. விருப்பி ஏற்க வேண்டும். அந்த விரும்புதலைச் செய்ய வைத்தலே ஒரு நல்ல ஆசிரியரின் கடமை. மாணவன் எப்பொழுதும் தன்னை வேறொரு நிலைக்குக் கொண்டு செல்ல விரும்புவதில்லை. ஆசிரியர் தான் அதனைப் புரிய வைக்க வேண்டும். ஆசிரியர் வெறும் மனிதன் அன்று மகத்துவம் பொறுந்திய மறு பெற்றோர். வேல்.சரவணக்குமாரின் கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது

வந்ததும் வராததுமாக
வீட்டுக் கணக்கு நோட்டைக் கேட்டார்
மனோகரன் வாத்தியார்
மனப்பாடச் செய்யுளைப் படித்துவிட்டீர்களா
என்று கேட்டார் மு.பா ஐயா
தவளைப்படம் வரைந்துவிட்டீர்களா என்றார் மெர்சி டீச்சர்
எவராவது கேட்டிருக்கலாம்
எல்லோரும் சாப்பிட்டீர்களா என்று..

***

# உள்ளுறை


பா.தேவி கவிதைகள் ----------------05

குறிப்புகள் தொகுப்புகள்----------9-14

பழமொழி --------------------------- 14

சிறுகதை ---------------------------- 18

கட்டுரை ----------------------------- 23

ஆசிரியர் தினச் சிறப்புக் கட்டுரை--25

# பா.தேவி கவிதைகள்

## மென்மையான தாய்..

தாயின் அன்பு..!
நிலவொளியுடன் வீசும்
தென்றல் காற்று போல
நித்திய மகிழ்ச்சியை
அளிக்கக் கூடியது..
தாயின் கண்டிப்பு..!
தாமரை இலை மீது
மோதும் நீர்த்துளி போல
பட்டும் படாமல்
வருடிச் செல்லக் கூடியது..
தாயின் அக்கறை..!
அதிகாலையில் ஒளிரும்
சூரிய ஒளி போல
மென்மையான உணர்வினை
விதைக்கக் கூடியது..
இதில் ஆழ்ந்து தொலைந்து போக
மறுக்கும் மனமும் உண்டோ..?

## முகவரி

நான் யாரையும் தேடுவதில்லை
என்னைத் தேடி அனைவரும் வருவதுண்டு
என் வாசலில்தான்
தபால்காரனின் நடமாட்டம்

வேலையுள்ளவனோ

வேலையில்லாதவனோ

இருவருக்கும் அடைக்கலம் தரும்

அற்புத வீடு நான்..

தேடல்கள் எனது நண்பன்!

பயணங்கள் எனது சகோதரன்

உறவுகளின் இணைப்புப்பாலமாய்

இருப்பவன் நான்..!

என்னைப் பயன்படுத்திக் கொள்பவர்கள்

என்னை மறக்க விரும்புவதில்லை..

மறந்தால் நிம்மதியுமில்லை

என்னைத் தெளிவுடன் அணுகுபவர்களை

நான் மறப்பதில்லை

பல முகங்களை இந்த உலகத்திற்கு

அறிமுகப்படுத்துவதால் எனக்கு

இப்பெயர் வந்ததோ..!

ஆம் பல முகங்களின்

அறிமுகமாய் இருப்பவன் நான்..

தெரிந்த ஊரிலிருந்து

தெரியாத இடம்வரை

நான் தான் நான் தான்..

## குருவிக்கூடு

குருவிக்கூடே உன்னில் நானும்

தங்கிக் கொள்ள இடமுண்டா?

இருந்தால் ஒரு ஓரமாய்

சிறு இடம்கொடேன்..
இரைச்சல் இல்லாத இடங்களில்
பதட்டம் இல்லாத பாதைகளில் வாழ்கிறீர்கள்
மரத்தில் விவசாயி
தொங்கவிட்டுச் சென்ற தூக்குவாலியா நீ..?
உன்னுள் வாழும் குருவிகள்
கூட்டுக்குள் குடும்பமாக வாழ்கிறதே..?
ஆனால் மனித வாழ்க்கையில்
கூட்டுக்குடும்பம் என்ற வார்த்தை
இல்லாமலே போய்விடும் சிறிதுநாளில்..
எத்தனை இலட்சம் கொடுத்தார்கள்
விழாத இந்த குருவிக்கூட்டிற்கு..?
எந்நேரமும் துள்ளித்திரியும்
இரட்டைவால் குருவிகளின் கூடமோ நீ..?
வீட்டினில் ஏற்றி வைத்த தீபம்போல்
உன் கூட்டினுள் யார் ஏற்றி வைப்பது?
குருவிகளைப் பாதுகாக்கும்
பாதுகாப்புப் பெட்டகமோ?
குருவிக்கூடே உன்னில் நானும்
தங்கிக் கொள்ள இடமுண்டா?
இருந்தால் ஒரு ஓரமாய்
சிறு இடம்கொடேன்..

## அடையாளம்

சங்கிலி போட்டுப் பூட்டி வைத்திருந்தேன்
என் அடையாளத்தை..

ஏளனப் பேச்சாளரின் அடிகளுக்கு
ஆளாகிவிடக் கூடாது என நினைத்தேன்
அடிவாங்கிக் கொண்டு திரும்பிய நாளும் உண்டு..
உன் திறமையை அடக்கிக் கொள் என்றேன்..
என்னுடைய அபிமானியர்கள்
என் அடையாளத்தின்
விலங்கை அவிழ்த்தனர்..
அடையாளத்தின் பெருமையை
அறியாதிருந்த நான்
திறமைகண்டு பெருமையடைந்தேன்..
சடலமாயிருந்த என் அடையாளத்திற்கு
உயிர் கொடுத்த உத்தமர்களுக்கும்
என் ஊமைத்திறமைக்கு
வாயசைத்துப் பேசக் கற்றுக் கொடுத்த
பேராசான்களுக்கும்
உரையாடி உலறவும் இயலவில்லை
வழக்காடி வாதாடவும் முடியவில்லை
இனி என்னால் முற்றுப்புள்ளி
வைக்கவியலாது..
மேற்கொண்டு தொடர்வதைத் தவிர..

## இருக்கைகள் நிரந்தரமல்ல

இந்த இருக்கைகள் நிரந்தரமல்ல
ஆனால் வன்முறை செய்யும்
இவைகள் மௌன யுத்தம் நடத்துகின்றன..
இது பதவியாளர்களின் பக்கவாத்தியம்

உவகையோடு நெஞ்சில் சுமக்கும்
நட்பின் நாற்காலியும்..
இளமைக்காலத்தில்
மனதில் பெய்யும் மயிலிறகு மழையும்..
காதலர்களின் இதயக் கருவறையில்
அமர்வுப் பலகையும்..
வாழ்க்கைப் பாதையில்
உயிர் எனும் பயணமும்..
அழிந்து போகும் அற்பமான அழகும்
துன்பத்தின் உருவாய்
இளமையின் விளிம்பில் நின்ற கண்ணீரும்
வெகுளித்தனமான மாணவர்ப் பருவமும்
முகவரி இல்லாத உறவுகளும்
நம் உயிருடன் பந்தயம் கட்டும் பணங்களும்
என எதுவுமிங்கு நிரந்தரமன்று
இங்கு எதையும் இருக்கையாகப் பார்ப்பவர்க்கு
இருக்கைகள் நிரந்தரமல்ல..

*பா.தேவி*

*இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு*

## ஆயுள்ரேகை

யானை – 70 ஆண்டுகள்

குதிரை – 25-30 ஆண்டுகள்

நீர் யானை – 40 ஆண்டுகள்

காண்டாமிருகம் - 40 ஆண்டுகள்

கரடி - 30 ஆண்டுகள்

குரங்கு - 20 ஆண்டுகள்

பூனை - 15 ஆண்டுகள்

நாய் - 13 ஆண்டுகள்

முயல் - 9 ஆண்டுகள்

வாத்து – 9-12 ஆண்டுகள்

*தொகுப்பு – மா.புவனேஸ்வரி*

*தமிழிலக்கியம் மூன்றாமாண்டு*

## அட அப்படியா?

- காட்டு வாத்துகள் கருப்பு நிறத்தில் முட்டையிடும்
- அருகானா கோழிகள் நீல நிறத்தில் முட்டையிடும்
- சாண்டி எனும் சிவப்புக் கோழி பச்சை நிறத்தில் முட்டையிடும்
- ஜப்பான் நாட்டு மயில்கள் சிவப்பு நிறத்தில் முட்டையிடும்
- ஆக்டோபஸ் ரத்தம் நீல நிறமாய் இருக்கும்
- வெட்டுக்கிளியின் ரத்தம் வெள்ளையாக இருக்கும்

முதலில் எழுதுவதற்கு வாத்தின் இறகுகளைப் பயன்படுத்தியுள்ளனர். இறகு என்பதைப் “பென்னா” என இலத்தின் மொழியில் கூறுவர். இதிலிருந்து வந்ததே பென்(Pen) எனும் சொல்.

*தொகுப்பு – பா.சுலைமான்*

*தமிழிலக்கியம் மூன்றாமாண்டு*

## முதலும் பெண்ணும்

உலகின் முதல் பெண் பல் மருத்துவர் – அமாலிய அசூ

உலகின் முதல் பெண் பொறியாளர் – எமலின் ராபட்ஸ் ஜோன்ஸ்

உலகின் முதல் பெண் மருத்துவர் – எலிசபெத் பெலக்வெல்

உலகின் முதல் பெண் காவல் அதிகாரி – சோபியர் ஸ்டான்லி
உலகின் முதல் பெண் கடல்சார் பொறியாளர் – சோனாலி
உலகின் முதல் பெண் விமான ஓட்டி – அமெரிய இயர்ஹார்டு
உலகின் முதல் பெண் ஜனாதிபதி – பீரபெல் மார்டினைஸ்
உலகின் முதல் பெண் ஆளுனர் – பியுட்ரோரிகான்
உலகின் முதல் பெண் விண்வெளிப் பயணி – கல்பனா சாவ்லா
உலகின் முதல் பெண் சமூகச் சேவகி – அன்னை தெரசா
உலகின் முதல் பெண் விஞ்ஞானி – மேரி கியுரி

*தொகுப்பு – கு.சந்தியா*
*தமிழிலக்கியம் மூன்றாமாண்டு*

## அணில் வாழ்க்கை

உலகில் அணில்கள் மற்றும் அவற்றைப் போன்ற வாழ்வு அமைப்பைக் கொண்ட ஜீவராசிகள் 365 உள்ளன. இவற்றை ஏழு குடும்பங்களாகப் பிரித்துள்ளனர். தரை அணில்கள், பறக்கும் அணில்கள், மா அணில்கள்.

அணில்களின் முக்கிய உணவு விதைகள், தானியங்கள், பருப்பு வகைகள் போன்றவையாகும். சிலசமயங்களில் இவை எதுவும் கிடைக்காத போது மாமிசத்தைக் கூட உண்ணும்.

அணில்களின் கர்ப்பகாலம் 33 நாட்களில் இருந்து 60 நாட்கள் வரை நடைபெறும். குட்டி அணில்கள் பிறக்கும் போது ஒரு அவுன்ஸ் எடையும் சுமார் ஒரு இஞ்ச் உயரமும் இருக்கும். அவற்றிற்கு முடியோ பற்களோ இருக்காது.

அணில்கள் பெரும்பாலும் தனியாகவே வாழும் தன்மையுடையது.

குளிர்காலங்களில் மட்டுமே மற்ற அணில்களைத் தன் கூட்டிற்குள் அனுமதிக்கும்.

அணில்கள் மணிக்கு 20 மைல் வேகத்தில் ஓடக்கூடியன.

அழகும் மென்மையும் உடைய இவ்வுயிரினம் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

*தொகுப்பு – சே.கோகிலா*

*தமிழிலக்கியம் மூன்றாமாண்டு*

## அறிஞர் அண்ணாவின் தோல்வியில் வெற்றி

1962 ஆம் ஆண்டு தேர்தல் வந்தது. அதில் அறிஞர் அண்ணா தனது தொகுதியான காஞ்சிபுரத்தில் தோல்வியடைந்தார். அத்தோல்வியை அனைவரும் துதிபாடிக் கொண்டிருக்க அதனை அறிஞர் அண்ணா எப்படிக் கையாண்டார் என்பதை அவரே பச்சையப்பன் கல்லூரியில் பேசும் பொழுது விளக்கமளித்துள்ளார்.

புனித ஜெருசலத்திற்காக ஐரோப்பிய நாடுகள் போரிட்டன. ஒப்பந்தம் ஏற்பட்டது. ஒரு நிபந்தனையும் விதிக்கப்பட்டது. ஐரோப்பிய படைக்குத் தலைமை வகித்த ரிச்சர்டு மன்னன் உள்ளே வரக்கூடாது ஏனையோர் வரலாம் என்பதே அந்த நிபந்தனை. இதைக் கேட்ட அந்த மன்னன்,

நான் உள்ளே போகாவிட்டால் என்ன, என் படைகள் உள்ளே போகிறது. அது போதும் எனக்கு என்றான். அதுபோல் தான் நானும் நினைத்தேன். சட்டசபையில் என்னை நுழையவிடவில்லை அதனால் என்ன? என் தம்பிமார்கள் ஐம்பது பேர் உருவில் நான் செல்கிறேன் என்றேன்.

அறிஞர் அண்ணா போன்று எதையும் மனநிறைவுடன் ஏற்றுக் கொள்ளும் பக்குவம் நமக்கு வேண்டும்.

*தொகுப்பு – வை.சத்யா*

*தமிழிலக்கியம் மூன்றாமாண்டு*

# தமிழ்த்தாய் எங்கே?

அறிஞர் அண்ணா அவர்கள் இந்தியை எதிர்த்து ஒரு கூட்டத்தில் தமிழ்த்தாய்க்கு இந்தி இடையூறாக முடியும் என்பதாகக் குறிப்பிட்டு விளக்கிக் கொண்டிருந்தார்

அந்தக் கூட்டத்தில் இருந்த ஒரு காங்கிரஸ்காரர் எழுந்து அண்ணாவை நோக்கி நீங்கள் தான் சுயமரியாதைக்காரர் ஆயிற்றே உங்கள் தமிழ்த்தாய் எங்கே இருக்கிறாள்? என்று வினா எழுப்பினார்.

இந்த வினாவைக் கேட்டதும் கூட்டத்தில் ஒரே குழப்பமும் கூச்சலும் நேரத்துவங்கியது.

இன்றைய காலக்கட்டத்தில் யாரேனும் ஒரு அரசியல் தலைவரை நோக்கிக் கேட்டிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதைச் சொல்லவா வேண்டும்?

ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் உங்கள் பாரதத்தாய் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில்தான் எங்கள் தமிழ்த்தாய் வீற்றிருக்கிறாள் என்று மென்மையாகக் கூறினாராம். இது தான் அண்ணாவின் ஆளுமைத்திறன். இது குறித்து விளக்கியவர் முல்லை பி.எல்.முத்தையா அவர்கள்.

*தொகுப்பு – ஷண்முகப்பிரியா*

*தமிழிலக்கியம் மூன்றாமாண்டு*

# பிரியமுடன் நிலா

விண்மீன்கள் கண்ணடிக்கின்றன என்று

முகிலுக்குள் முகம் புதைத்தேன்
என் முன்னால் நிற்க
அருகதையில்லையென்று
அது அகன்றுவிட்டது..
இனி என்னை நோக்காத
மானுட விழி இல்லையென்று
இறுமாந்தேன்..
இன்று என் முகத்தில் நானே
கரிபூசிக் கொண்டு
காணாமல் போகிறேன்..
ஆம் மானுட மாதர்கள்
என்னினும் அழகாய் இருக்கும் பொழுது
நான் பௌர்ணமியாய் இருந்தால்
பலருக்கும் கண் கூசும் அல்லவா..?
இனி மலராமல் இருண்டே போகிறேன்
என்றும் அமாவாசையாய்..
பிரியமுடன் நிலா

*பு.கமலக்கண்ணன்*
*தமிழிலக்கியம் மூன்றாமாண்டு*

## பழமொழி

கடந்த இதழின் தொடர்ச்சி

251)இட்டவன் இடாவிட்டால் சன்மப் பகை

252)ஐந்தும் மூன்றும் அடுக்காய் இருந்தால் அறியாப் பெண்ணும் கறி ஆக்குவாள்

253)அன்னமில்லாதவனுக்கு அனைத்தும் நியாயம்தான்

254)சுமந்தவன் தலையில் சும்மாடு

255)சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்

256)செட்டார்க்கு உற்றார் கிளையிலும் இல்லை

257)மின்னுவதெல்லாம் பொன்னல்ல

258)ஓயா வேலை தீராச் சோர்வு

259)தானம் கொடுப்பவனே தனவான் ஆகிறான்

260)தனக்கு மிஞ்சிய பிறகு தான் தானமும் தர்மமும்

261)ஏழை என்றால் எவர்க்கும் எளிது

262)குந்தித் தின்றால் குன்றும் மாளும்

263)கோபம் சண்டாளம்

264)தனக்கென்றால் பிள்ளையும் களை வெட்டும்

265)முதுகு முறியும் வரைதான் மூட்டை சுமக்க முடியும்

266)தன் வீட்டு விளக்கென்று முத்தமிடலாமா?

267)அதிர்ஷ்டமும் துரதிஷ்டமும் மனைவி அமைவதில் தான்

268)தோழமையோடும் ஏழைமை பேசேல்

269)புலி அடிக்கும் முன்னே கிலி அடிக்கும்

270)ஆஸ்தி உள்ளவன் ஆஸ்திக்கு அடிமை

271)ஆஸ்தி இல்லாதவன் மனிதன் அல்ல

272)குறிக்கோள் உடையோர் ஊக்கம் குன்றார்

273)பேராசைக்கு இல்லை இரக்க குணம்

274)ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை

275)பட்டிக்காட்டுக்குச் சிவப்புத் துப்பட்டியே பீதாம்பரம்

276)மலையைக் கல்லி எலியைப் பிடிப்பது போல

277)சேற்றில் இருந்தாலும் செந்தாமரை அழகு

278)சொல் அம்போ? வில் அம்போ?

279)கழுதைக்குச் சேணம் காட்டினாலும் குதிரை ஆகுமா?

280)தன் ஊரில் புலி அயலூரில் எலி

281)கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

282)காலிக் கோணி நிமிர்ந்து நிற்காது

283)அமாவாசைச் சோறு என்றைக்கும் அகப்படுமா?

284)கோபம் கொலைப்பழியிலும் கொண்டுவிடும்

285)கோபம் அரைப் பைத்தியம்

286)தன்னையே கொல்லும் சினம்

287)மானம் பெரிதோ?பிராணன் பெரிதோ?

288)அடுக்குகிற அருமை நாய்க்குத் தெரியுமா?

289)நாய் பெற்ற தேங்காய் போல

290)பலநாள் வெயில் ஒறுத்தாலும் ஒருநாள் மழை ஒறுக்காது

291)குரங்கின் கையில் கொள்ளியைக் கொடுத்தது போல

292)ஆடத் தெரியாத நாட்டியக்காரி மேடையைக் குறை சொல்லுவாள்

293)முரட்டு மாட்டுக்குக் குட்டைக் கொம்பு

294)விவேகிக்கு அடித்து விளக்க வேண்டுமா?

295)நரைத்தவன் எல்லாம் கிழவனா?

296)பால சோதிடம் விருத்த மருத்துவம்

297)சமயம் வந்தால் உத்தமனும் தப்புவான்

298)முதலில் தகுதிபெறு பின்னர் விரும்பு

299)ஒரு காசு பேணின் இரு காசு போல தேறும்

300)வளர்ந்த கடா மார்பிலே பாய்ந்தது போல

----தொடரும்

A.மேனகா-இரண்டாமாண்டு இ பிரிவு

# சாதனையும் வேதனையும்

**வால்ட் டிஸ்னி**

**வேதனை** - செய்தித்தாள் நிறுவனம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்த இவர் சீக்கிரமெ அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். காரணம் இவருக்குக் கற்பனைத்திறன் இல்லையாம். அடுத்ததாக ஓவியம் வரையத் தெரியவில்லை என்ற குற்றச்சாட்டில் விளம்பர நிறுவனம் ஒன்று இவரை நீக்கியது

**சாதனை** – மிக்கி மவுஸ் உள்ளிட்ட பல கற்பனைக் கதாப்பாத்திரங்களை உருவாக்கினார் 26 ஆஸ்கார் விருதுகளை வென்றார்.

மைக்கேல் பெல்ப்ஸ்

வேதனை – 5 நிமிடங்கள் இவனால் பேசாமல் இருக்க முடியாது. எதிர்காலத்தில் இவனால் எந்த வேலையையும் முழுமையாகச் செய்ய முடியாது என்றார் மருத்துவர்.

சாதனை – ஒலிம்பிக்கில் அதிகப் பதக்கம் பெற்றவர் என்ற பெருமையை அடைந்தார்.

மைக்கேல் ஜோர்டான்

வேதனை – தனது பள்ளியின் கூடைப்பந்து அணியில் இருந்து விலக்கப்பட்டு அலைக்கழிக்கப்பட்டார்.

சாதனை – ஒலிம்பிக்கில் 2 தங்கம், 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து அதிக புள்ளிகள் எனக் கூடைப்பந்தில் சாதனைபுரிந்தார்.சேனல்

ஒன்றின் 20 ஆம் நூற்றாண்டின் சிறந்த 100 விளையாட்டு வீரர்களில் முதலிடத்தைப் பிடித்தார்

தொகுப்பு - ந.கார்த்திகா
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

**சிறுகதை**

# பிதாக்கள்

சைக்கிளில் உட்கார்ந்து வந்த காந்தி திடீரென தம்பி சத்த வண்டிய இப்படி ஒரு ஓரமா நிறுத்துப்பான்னுட்டார். நிறுத்திட்டு திரும்பிப் பார்த்தால் காந்தி வேக வேகமா நடந்து போயிட்டார்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. காந்திய நோக்கி வண்டியைத் தள்ளிக்கொண்டே ஓடினேன். நல்லாதான் பேசிக்கிட்டு வந்தோம் ஏன் திடீரென்று இந்த மனுசன் பின்னால் திரும்பிச் செல்கிறார் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நான் பேசிய விதம் அவரை எரிச்சல் அடையச் செய்துவிட்டதோ? அல்லது நான் பேசிய கருத்தில் அவருக்கு உடன்பாடில்லையோ? அதற்காக இப்படியா சொல்லாமல் இறங்கிச் செல்வது? இதுவா நாகரிகம்? என்று புலம்பிக்கொண்டே அவரைப் பின்தொடர்ந்தேன். அய்யா கொஞ்சம் நில்லுங்க. ஏன் இப்படி எதுவும் சொல்லாமல் கிளம்பிட்டீங்க? என்னாச்சு? என்று மூச்சிறைக்க கேட்டேன்.

காந்திய பத்தின புரிதல் உங்களுக்கு இன்னும் போதாது தம்பி. நீங்க கிளம்புங்க என்று அமைதியும் கோபமும் கலந்த தொணியில் ஐம்புலன்களையும் அடக்கிக் கொண்டே வெளியே வார்த்தைகளைக் கொட்டினார். அய்யா மன்னிச்சிடுங்க. உங்க அனுமதிய கேட்டுட்டு

தானே இப்படி பேசுனேன். வேண்டாம்னு மறுத்திருந்தா இவ்வளவு தூரம் பேசிருக்க மாட்டேன்.

சரிதான் அனுமதியோடு தான் பேசுன. ஆனாலும் காந்திய பற்றித் தவறாகப் பேசியதும் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டுட்டேன்.

பாத்தீங்களா? இங்க தான் பெரியார் இருக்காரு. யாரைப் பற்றி யார் பேசுனாலும் செவிசாய்த்து மரியாதை செய்வார். சுயமரியாதையை மட்டும் விட்டுக்கொடுக்க மாட்டார்.

தம்பி நீ சின்ன பையன்ல அதான் அரைகுறையா ஏதோ புத்தகங்கள படிச்சுட்டு புலம்புற. காந்தியோட பெரியாரை ஒப்பிடாதப்பா. அவர் தேசப்பிதா. ஏன் ஆடையை முழுமையாக உடுத்தவில்லைனு வெள்ளக்காரன் கேட்டதுக்கு என் மக்களுள் பலர் இன்னும் உடுத்தக் கூட ஆடையில்லாமல் வாடுகின்றனர். நான் மட்டும் எப்படி முழுதுமாக உடுத்துவது? அதுதான் எனக்கும் சேர்த்து உங்கள் மன்னன் உடுத்தியிருக்கானே என்று வேடிக்கையாகவும் வேதனையாகவும் விவாதித்துவிட்டு வந்தவரல்லவா மகாத்மா. ஆனால் உங்கள் பெரியாரோ நவீனம் என்ற பெயரில் அம்மணமாக நின்று நிர்வாண சங்கத்தினருடன் அங்கலாய்த்திருக்கிறாரே அதுபற்றித் தெரியுமா தம்பி உனக்கு?

ஐயா ஒருமுறை உங்களுக்கு நினைவுபடுத்திக் கொள்கிறேன் பெரியாரின் களப்பணியில ஒரு வெளிப்படையான அரசியல் இருந்தது. காந்தியிடம் அது இல்லை. அதை முதலில் நீங்கள் புரிஞ்சுக்கனும். பெரியார் நிர்வாணசங்கத்தாருடன் நின்றபடி புகைப்படம் ஒன்று இருக்கிறதுதான். நான் இல்லைனு சொல்லலையே. அதற்கான காரணத்தையும் வெளிநாட்டவர் கலந்துரையாடலையும் பெரியாரே கூறியிருக்காரே. ஊரெல்லாம்

அம்மணமா இருக்கும் பொது தான் மட்டும் கோமணம் உடுத்தினா தப்பாயிடாதா? அதைத்தான் பெரியார் செய்தார்.

சரி அதை விடு.. காந்தியுடனே இருந்து காங்கிரஸ் இயக்கத்தையே நாடியிருந்து திடீரென காங்கிரஸை எதிர்க்கிறேன். காந்தியை எதிர்க்கிறேன் என்றால் என்ன பேச்சு அது?

ஐயா உங்களுக்குத் தெரியாதது இல்ல பார்ப்பனர்களைக் கடுமையாகச் சாடினார் என்று இங்கு யாரும் பெரியாரைக் கூறிவிட முடியாது. மாறாக பார்ப்பனியம் என்ற பெயரில் உள்ள மனுசாஸ்திர மூடநம்பிக்கைகளைத் தான் களைத்தெறியப் போராடினார். அதைப் பற்றிப் பேசினால் சொல்லிக்கொண்டே போகலாம். காந்தியின் இந்துத்துவா கொள்கையில்தான் பெரியாருக்கு உடன்பாடில்லை. அதனை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்த காந்தியையும் பிற்காலத்தில் பெரியார் எதிர்க்கத் தொடங்கினார். அதனால் காந்தியின் எதிர்ப்புமுகமாகக் காந்தி நடச்சொன்ன தென்னைகளை விடாப்பிடியாக அழித்தார். இதெல்லாம் பழைய கதையென்று உங்களுக்குத் தெரியாதா பின்னே?

பெரியார் மட்டும்தான் களப்போராளியா? ஏன் காந்தி கிடையாதா? எத்தனை வேணும் சான்றுக்கு? உப்புச்சத்தியாக்கிரகமும் வெள்ளையனே வெளியேறு இயக்கமும் சும்மாவா நடத்திட்டுப் போனாரு..?

என்னதான் இருந்தாலும் பகத்சிங் இறப்புக்குக் காந்தியும் ஒரு காரணம் தானே?

தம்பி வரலாறு தெரியாம எதையாவது உளறாதப்பா.. பகத்சிங் தந்தைக்கும் காந்திக்குமான உறவைத் தெரிந்து பேசு சரியா..?

திடீரென எனக்குப் பயமாகிப் போனது. என்ன உறவாக இருக்கும்? ஒன்றும் புரியவில்லை. சரி விசயம் இல்லாமலா போகும். அவர் முகத்தில் ஏதோ காந்திய வெறி என்பதையும் மீறி தேசம் மீதான பற்று அவ்வப்போது ஒளிர்விட்டுக் கொண்டிருப்பதை நான் அவதானித்துக் கொண்டிருந்தேன். உண்மையில் தீவிரமான ஒரு அஹிம்சைவாதிதான்.

சரிங்கய்யா பெரியார் மீது அப்படி என்னதான் உங்களுக்கு வெறுப்பு?

வெறுப்பா? எனக்கா? அப்படியெல்லாம் கிடையாது தம்பி. நம்ம நாட்டுல எத்தனையோ தலைவர்கள் சுயமரியாதைக்காக நேரடியாகவம் மறைமுகமாகவும் களத்தில் போராடியிருக்கிறார்கள். அதில் பெரியாரின் இடம் மிக மிக முக்கியமானது. காங்கிரஸ் ஆட்சி நாடுமுழுக்க கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கும் பொழுது தமிழ்நாட்டில் சுத்தமான எதிர்ப்புவாதிகளாக இருந்தவர்கள் திராவிடக் கட்சியைச் சார்ந்தவர்கள். ஆனால் இன்று பெரியார் வகுத்துக் கொடுத்த பகுத்தறிவு விளக்கங்கள் எவ்வளவு தூரம் செல்லுபடியாகிறது சொல் பார்க்கலாம்.?

அது உண்மைதான் பெரியாரியக் கொள்கைகள் இன்றைய காலத்தில் ஒத்துவரவில்லைதான். அதற்காக அதனை ஓரம்கட்டிவிட முடியாதுல அய்யா??

பெரியார் வரை எல்லாம் சரிதான் தம்பி. பெரியாருக்கு அடுத்து என்று வரும்பொழுது தான் தமிழ்நாட்டு அரசியலில் சிக்கல் வருகிறது. ஆனால் காந்தி அப்படி இல்லையே. இன்று எத்தனையோ நாடுகள் காந்தியின் அஹிம்சையைப் பின்பற்றி வருகிறார்களே! அது ஒன்று போதாதா? காந்திக்குக் கிடைத்த

வெற்றி?? இன்றும் பல தீர்வுகளுக்கு தீவிரவாதத்தைவிட அஹிம்சையே சரி என்பதை நாம் கண்டுகொண்டு தானே இருக்கிறோம்.

காந்தி அய்யா இப்பொழுது எதிர்மறை வாதங்களைத் தவிர்த்து நாட்டின் நிலைப்பாடு குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டேன்.

அய்யா பேச்சுவாக்கில் நாம மதிவண்டியை உருட்டிக் கொண்டே வந்துவிட்டோம். பரவாயில்லை விடுப்பா. என்ன மோசம் போயிடுச்சு. சரி நீ ஏதோ ஒரு இயக்கத்தில இருக்கிறேன்னு சொன்னியே என்ன பேரு?

யுத்தம் செய் இளைஞர் நற்பணி மன்றம்.

அதுசரி. முதல்ல **சுத்தம் செய் நற்பணி மன்றம்**னு பேர மாத்தி இந்த நாட்ட சுத்தம் பண்ணுங்கப்பா..

சுத்தம்னா விளம்பரத்துக்காக போஸ் கொடுக்குறாங்களே அந்தச் சுத்தம் இல்ல. சாமானியனின் மனசுச் சுத்தம், அவனின் அடிப்படை வசதிச் சுத்தம். அப்புறம் பெரிதாக யோசிக்கலாம்.

பாவம் பெரியவர் விடை பெறும் பொழுது ஏதோ அறிவுரை சொல்ல ஆசைப்பட்டிருக்கிறார் சொல்லட்டும். ஆனால் யோசிக்க வேண்டும் பின்புதான் செயல்படனும்.

யுத்தமா? சுத்தமா?

யுத்தம் என்றால் பெரியார் சுத்தம் என்றால் காந்தி என்று யாரேனும் புரிந்து கொண்டால் அதற்கு நான் பொறுப்பல்ல..

அகரன்

# பெண்களின் நிலை

பெண் என்று சொன்னாலே நம்மில் பெரும்பாலானோருக்கு நினைவுக்கு வருவது அடிமைத்தனமும் அடக்குமுறையும். பெண்கள் நம் நாட்டின் கண்கள் என்ற வாக்கியம் நம் நாட்டில் பெயரளவிலே உள்ளது. இதை நாம் பின்பற்றுகிறோமா என்றால் தொண்ணூறு சதவிகிதம் இல்லை என்றே சொல்லலாம். வெளியில் பெண்ணியம் பேசிவிட்டுத் தன் வீட்டு இல்லாளுக்கு இன்னல் புரிகின்ற ஆண்களைக் கடைத்தெரு நெடுகிலும் காணலாம். தாய், மனைவி, அக்கா, தங்கை என்று நம்முடன் இருப்பவர்களுக்கே நாம் சுதந்திரம் அளிக்கவில்லை. பிறகு எப்படி பணியிடங்களில் படிப்பிடங்களில் வெளியிடங்களில்?????

பெண் சுதந்திரத்தைப் பற்றி எத்தனையெத்தனை கவிதைகள் கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன. யாவும் விழலுக்கு இறைத்த நீர் போல செவிடன் காதில் ஊதின சங்கு போல வீணாய்ப் போனது.

நம் நாட்டுப் பெண்களுக்கு நிகழக் கூடிய தொல்லைகளும் அவமானங்களும் வார்த்தைகளால் விவரிக்க முடியாதவை. மேலைநாடுகளில் பெண்களுக்குப் பாலியல் தொல்லை என்பது மிக மிகக் குறைவு. அப்படி ஏதேனும் தொல்லையிருப்பின் அதற்கான தண்டனைகளும் சட்டங்களும் கடுமையானதாக இருக்கும். ஆனால் நம் நாட்டில் குறைந்தபாடில்லை. எத்தனையோ பெண்கள் தனக்கு நேர்ந்ததை அவமானமாகக் கருதி வெளியில் சொல்லக் கூச்சப்பட்டு கண்ணீர் வடித்து உள்ளுக்குள்ளே சாகின்றனர்.

எத்தனை நாட்கள் தான் பெண்கள் குமுறிக் கொண்டே வாழ்வது. இதற்கான தீர்வு எங்கே இருக்கிறது? மாற்றம் நிகழுமா? என்று

சிந்தித்தோமேயானால் அது பெண் கல்வியில் தான் இருக்கிறது. பெண்கள் படிக்கத் துவங்கி பல ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் அவர்கள் முழுமையான கல்வியைப் பெற்றிருக்கிறார்களா? தன்னை வெளியுலகத்திற்கு அடையாளம் காட்டிக்கொள்ளக் கூடிய அளவிற்கு உழைக்கின்றார்களா? உழைக்க வழி விட்டுள்ளோமா? என்று சிந்திக்க வேண்டும்.

மாணவர்கள் நினைத்தால் எல்லாம் நடக்கும். பெரும்பாலான பெண்கள் தனது படிப்பை ஆண்களுடன்தான் தொடர்கின்றனர். ஆண் பெண் உறவிலிருந்து இந்த மாற்றம் நிகழ வேண்டும். மாணவர்களிடையே பாலியல் கல்வி குறித்த ஆத்மார்த்தமாகப் போதிக்க வேண்டும். பெண்ணை வெறும் இச்சைப் பொருளாகப் பார்க்கப்படுகின்ற அவல நிலை மாற வேண்டுமாயின் ஆண் பெண் கல்வி முறையில் மாற்றம் கொண்டு வர வேண்டும். அதற்கு ஆசிரியர்களும் ஆண்களும் மனது வைத்தல் வேண்டும். குறிப்பாக ஆண்கள் தன் சக தோழியாகப் பெண்ணைப் பார்த்துப் பழக வேண்டும். அதற்கு கல்விநிலையங்கள் கற்பித்தல் முறையை மாற்றியமைக்க முன்வர வேண்டும்.

வெளிநாடுகளில் பெண்கள் ஆணுக்கு நிகராக பணியில் அமர்ந்துள்ளனர். அதனால்தான் வளர்ந்த நாடுகளாக உள்ளன. ஆனால் நம் நாட்டில் அப்படியில்லை. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்கிற நிலைதான் உள்ளது. இந்நிலை மாறுவதற்குச் சில ஆண்டுகள் போதும். ஆண்கள் மனது வைப்பதோடு பெண்களும் சாதிக்க முன்வர வேண்டும். அப்பொழுதுதான் மாற்றத்தை எதிர்பார்க்க முடியும்.

V.மாதேஸ்வரன்

கணினிப் பயன்பாட்டியல்

முதலாமாண்டு அ பிரிவு

# ஆசிரியர் தினச் சிறப்புக் கட்டுரை

வருடம் முழுவதும் எத்தனையோ விஷேச நாட்கள் வருகின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக, அதன் முக்கியத்துவத்தைப் பொறுத்து அனுசரிக்கப்படுகின்றன. ஆனால், வருங்கால தலைமுறையினரான மாணவர்கள், அந்த வருங்காலத்தை, தங்களுக்குள் நிர்மாணிப்பதில் பெரும் பங்கு வகிக்கும் ஆசிரியர்களுக்காக, அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு வைபவமாக கொண்டாடுவது ஆசிரியர் தினம். அந்த வகையில், மற்ற சிறப்பு தினங்களோடு ஒப்பிடுகையில், இந்த ஆசிரியர் தினமானது மாறுபட்டு நிற்கிறது.

**ஆசிரியர் தின வரலாறு**

உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில், வெவ்வேறு தேதிகளில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. அந்தந்த நாட்டைச் சேர்ந்த சிறந்த கல்வியாளரைக் கவுரவிக்க அல்லது அந்தந்த நாட்டில், கல்வி தொடர்பாக ஏற்பட்ட ஒரு சிறப்பான மாற்றத்தை நினைவுகூற என்ற காரணங்களுக்காக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுவதால், ஒவ்வொரு நாட்டிலும் தேதி மாறுபடுகிறது.

இந்தியாவில் செப்டம்பர் 5ம் தேதி ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. நமது நாட்டின் இரண்டாவது ஜனாதிபதியாக பதவி வகித்த சர்வபள்ளி திரு. ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாளையே ஆசிரியர் தினமாக கொண்டாடுகிறோம். அவர் ஒரு ஆசிரியராக இருந்தவர். சிறந்த தத்துவமேதை என்று பெயர் பெற்றவர். நல்ல கல்வியாளர். ஒருமுறை அவரது மாணவர்கள்

சிலர், அவரின் பிறந்தநாளை கொண்டாடுவதற்கு அனுமதி கேட்டபோது, அவர் பின்வருமாறு கூறினார், "எனது பிறந்தநாளை தனிப்பட்ட முறையில் கொண்டாடுவதைவிட, அதையே ஆசிரியர் தினமாகக் கொண்டாடினால், நான் பெருமையாக உணர்வேன்" என்றார். அவரின் வேண்டுகோளுக்கிணங்க, கடந்த 1962ம் ஆண்டு முதல் இந்தியாவில் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

தனது வாழ்வில் ஆசிரியர் பணியைப் பெருமையாய் கருதியவர், ராதாகிருஷ்ணன். ஆசிரியர் தொழிலுக்கு மரியாதை கொடுத்தவர். பெருமையைக் கொணர்ந்தவர். ஒரு நல்ல ஆசிரியரால் எவ்வளவு தூரம் பயணப்பட முடியும் என்பதற்கு அவரே நேரடிச் செயல் விளக்கம். பல ஆசிரியர்கட்கு முன்னுதாரணம். ஆசிரியர்கள், மாணவர்களை உருவாக்குகிறார்கள். அவர்கள் மாணவர்களுக்கு, வாழ்வின் முன்னுதாரணமாய், என்றென்றுமான உந்து சக்தியாக மாறிப் போகின்றனர். ஆசிரியரிடம் கற்கிற பாடங்கள், மாணவரின் வாழ்வு முழுதும் வழிநடத்தும் சக்தியாக மாறுகின்றன. ஆசிரியர்களே, எல்லா தடைகளையும் உடைத்து, மாணவர்களின் ஆன்மாவுள் நுழையவும், சுய ஒளியைத் தரவும் தகுதி பெற்றவர்கள். ஒரு சமூகம், அதி உன்னத நிலை அடைந்து இருந்தால், நிச்சயமாக அதன் பின்னால் அற்புதமான ஆசிரியர் சமூகம் இருப்பதாக அர்த்தம். ஒரு சமூகம் தாழ்ந்து போனால், ஆசிரியர் சமூகம், தனக்கான பணியைச் சரிவர செய்திடவில்லை என அர்த்தம். வேறு எந்தத் துறையை விடவும் அதிகப் பொறுப்புகளும், அதிக முக்கியத்துவமும் நிறைந்தது அவர்கள் பயணம். மாணவர்களுக்கு அதிகம் தேவைப்படுவது, என்றென்றுமான ஊக்கமும், தன்னம்பிக்கையும், நன்னெறிகளும். இதைச் சரியாக மலர

செய்திட்டால், அங்கே ஆசிரியர் வேலை அதன் முழு நிறைவை எட்டியதாக அர்த்தம். ஒரு மாணவன் ஆசிரியரை அடையும் தருணத்தில், வெறும் மண் கலவையாய் மட்டுமே உள்ளான். அவனைத் தேவையான வடிவில், சிலையாக வார்ப்பது ஆசிரியனின் பணியாக உள்ளது.

**ஆசிரியப் பணியின் மதிப்பு**

ஆசிரியர்களுடைய பணியின் மதிப்பு அளவிடப்பட முடியாதது. ஏனெனில், ஒரு மனிதனை மனிதன் என்று அடையாளப்படுத்துவது, மிருகங்களை மீறிய சிறப்புப் பண்புக்கூறுதான். அந்தச் சிறப்புப் பண்புக்கூறு சிறந்த கல்வியின் மூலமே கிடைக்கிறது. அந்தச் சிறந்த கல்வியை அளிக்கும் மாபெரும் பணி ஆசிரியர்களைச் சார்ந்துள்ளது. ஏனெனில், ஆசிரியர்கள் உருவாக்கும் மாணவர் சமூகமானது, ஒரு நாட்டின் எதிர்காலத்தை மட்டுமல்ல, இந்த உலகின் எதிர்காலத்தையே தீர்மானிக்கிறது. அனைத்து மக்களின் நல்வாழ்வும் அந்தச் சமூகத்தின் கைகளில்தான் உள்ளது. எனவே, இந்த இடத்தில் ஆசிரியர் என்பவரின் பணியானது, அனைத்தையும்விட உயர்ந்து நிற்கிறது.

**மற்ற பணிகளைப்போல ஆசிரியர் பணி என்பது ஒருவரின் வாழ்வாதாரத்திற்கான பணி அல்ல. தனது வாழ்வையே ஆதாரமாக்கும் பணி.** அந்தப் பணியில் வேண்டுமானால், வாழ்வை நகர்த்துவதற்கான ஊதியம் கிடைக்கலாம். ஆனால் அந்த ஊதியத்திற்காக அந்தப் பணி அல்ல என்பதுதான் ஒரு சிறந்த ஆசிரியரின் தத்துவம். ஆசிரியர் பணி என்பது ஒரு உயிரோட்டமான பணி. ஆய்வு ரீதியான பணி. உளவியல் ரீதியான பணி. சேவை ரீதியான பணி. அர்ப்பணிப்புள்ள பணி. கால-நேரமற்ற பணி. ஒரு

சிறந்த ஆசிரியர் வகுப்பறைக்குள் மட்டுமே ஆசிரியராக இருப்பதில்லை, இருக்கவும் முடியாது. அவர் தன் வாழ்வின் பெரும்பகுதி நேரங்கள் ஆசிரியராகவே இருக்கிறார். அவரின் சேவைக்கு எல்லை கிடையாது. மனித வாழ்வில் திருப்பு முனையை ஏற்படுத்தி, அதற்கு அர்த்தத்தைக் கொடுக்கும் ஒரு கடமை ஆசிரியருக்கு உள்ளது. உலகில் உள்ள பணிகளிலேயே, ஆசிரியர் பணியே அதிக திறமைகள் தேவைப்படும் பணி என்று சொல்லும் அளவிற்கு அதன் பொறுப்புகள் அதிகம். எனவே, அந்தப் பணிக்கு தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்படுவதை உறுதிசெய்வது அரசின் பிரதான கடமை.

இது ஒரு கதை. ஒரு கவிதையின் உரை வடிவம். இறைவன் ஆசிரியனை உருவாக்கும் முயற்சியில் முனைந்து இருக்கிறான். அது இடைவிடாத ஆறாவது நாள் வேலை அவருக்கு. அவர் முன்னாள் ஒரு தேவதை தோன்றியது. இந்த வடிவை உருவாக்க ,நீங்கள் தேவைக்கும் அதிகமாக நேரத்தை எடுத்து கொள்கிறீர்கள் என தேவதை இறைவனிடம் முறையிட்டது. இறைவனைப் பொறுத்தவரையில், ஆசிரியர் தொழில், நிறைய பொறுப்புகளை உள்ளடக்கியது. அவர் நிறைய இளம் உள்ளங்களை சென்றடைய வேண்டியவர். அந்த நிலையில் இறைவனின் கைகளில் ஒரு செயல் விளக்கம். வேறு என்ன? ஆசிரியர் இந்தக் கலவையோடு இருக்க வேண்டும் எனும் குறிப்புகள் தான். அதைத் தேவதையின் கைகளில் கொடுத்த இறைவன், அதைச் சரிபார்க்கச் சொன்னார். அவை இப்படி சென்றது..

* ஆசிரியன், அனைவர்க்கும் மேம்பட்டவராய் இருக்க வேண்டும், இத்துடன் மாணவரின் நிலைக்கு இறங்கி வரக் கூடியவராய் இருக்க வேண்டும்.

* அவர் தான் கற்பிப்பதற்குச் சம்பந்தம் இல்லாத நூற்று எண்பது விஷயங்களைச் செய்திடக் கூடியவராய் இருக்க வேண்டும்.

* முக்கியமான விஷயங்களைத் தினமும் மாணவ சமூகத்துடன் பகிர்ந்து கொள்ளக் கூடியவராய், தினமும், சரியான நேரத்தில் வகுப்பில் இருப்பவராக இருத்தல் வேண்டும்.

* தனக்குச் செலவிடும் நேரத்தை விட அடுத்தவருக்கு அதிகம் செலவழிக்க வல்லவராய்..

* என்றென்றும் தவழும் புன்னகையுடன், பிரச்சனையுடன் வலம் வரும் மாணவரையும், பெற்றோரையும் எதிர்கொள்ள வல்லவராய் ..

* மற்றவர் தமக்குத் துணை நிற்காத தருணத்திலும் தனது பணியைச் சிறப்புற செய்பவராய், தம் மாணவருக்கு இன்னொறு பெற்றோராய்..

* மூன்று இணைக் கைகளைக் கொண்டவராய் இருக்க வேண்டும்..

ஆறு கரங்கள்.. அது முடியாத காரியம் என வியப்பு மேலிட தேவதை கேட்டது,. என்னைப் பொறுத்தவரையில்,. கைகளை அமைப்பதில் பிரச்சனை ஏதுமில்லை. பிரச்சனை.. மூன்று இணைக் கண்களை அமைப்பதில் தான் என்றது இறை .. ஒரு சாதாரண உருவாக்கத்தில், ஆறு கண்களா.. தேவதையால் நம்ப முடியவில்லை.

ஒரு இணைக் கண்கள், ஒரு மாணவனை அவன் எப்படி இருக்கிறானோ அப்படியே அணுகிட.. அடுத்தவர் குத்தும் முத்திரைகளை ஏற்காத பக்குவம்.. அடுத்த இணைக் கண்கள்,

எதையும் காணாமல், அந்த மாணவனைப் பற்றி அறிந்து கொள்ள வழிவகுப்பதாய். இந்த கண்கள், தலையின் பின்புறம் அமையும். முன்புறம் உள்ள கண்கள், அவர்களை நோக்கி, நான் உன்னை புரிந்து கொண்டேன், உன் மீது மற்ற எவரையும் விட , என்றென்றும் நம்பிக்கை கொண்டுள்ளேன், உன் மேல் பெரும் மதிப்பு கொண்டுள்ளேன் என ஒரு வார்த்தையும் உரைக்காமல் சொல்ல..

அதற்கு தேவதை இது என் வரையில் பெரிய செயல் வடிவம் போல் தோன்றுகிறது. நீங்கள் ஏன் நாளை தொடர கூடாது என்றது. அதற்கு இறை, அது முடியாது. இங்கு நான், என்னைப் போல் ஒருவரை உருவாக்கும் முயற்சியில் உள்ளேன். அவர்கள் நோயுற்ற தருணத்திலும் தம் பணியில் இருப்பார். தம் இதயத்தில், தம் மாணவர்க்கு எனத் தனி இடம் கொடுத்து இருப்பார். எந்த மாணவரையும் சீர்தூக்கிப் பார்க்க கூடியவராய், மாணவர்களின் சிக்கல்களைப் புரிந்து கொள்ளக் கூடியவராய் இருப்பார்.

தேவதை அந்த உருவை, அந்தச் சிற்பத்தை, இன்னும் சற்று அருகே சென்று கண்டது. இது மென் இதயம் பெற்ற உரு இல்லையா என ஆச்சர்யத்துடன் கேட்டது ? அதற்கு இறை ஆம், ஆனால் வலிமையானதும் கூட எனப் பதில் சொன்னது. இந்த ஆசிரியன் எவ்வளவு மனத் திண்மை கொண்டவன் என உன்னால் அனுமானிக்க முடியாது என்றது. இந்த உரு சிந்திக்க வல்லதா? ஆம், நிஜம், அத்துடன், சரியான காரணத்துடன், சமாதானம் கொள்ளவும் மிக்கது. அந்த நிலையில் தேவதை, உருவின், கன்னத்தைத் தொட்ட நிலையில் ஒரு நீர் துளியைக் கண்டது. இறையிடம் திரும்பி இதோ ஒரு நீர்க்கசிவை விட்டு விட்டீர்கள்

என்றது. இது நீர்க்கசிவு அல்ல. இது ஒரு கண்ணீர்த் துளி என்றது இறை. கண்ணீர்த் துளி? ஏன்? - இது தேவதை.

இறை நிறைய சிந்தனையுடன் சொன்னது.. இது ஆசிரியருக்கு அடிக்கடி வர கூடியதே. இது ஒரு ஆண்டு முழுவதும் மாணவர்களுடன் இருந்து, அவர்களை வழியனுப்பி விட்டுப் புது மாணவரை வரவேற்கும் தருணத்தில் அரும்பும். ஒரு சில மாணவர்களைச் சரிவர அணுக முடியாமல் போன வருத்தத்தில் அரும்பும். அந்த மாணவரின் பெற்றோர் கொள்ளும் இரக்க உணர்வில், அவர்கள் மாணவர்கள் சாதிக்கும் சிறு சிறு விஷயங்களில் பெருமையுடன் கண்ணீர்த் துளிர்க்கும், என் மாணவர்கள் புதிய சிகரங்களை, மேன்மையை அடையும் தருணங்களில் துளிர்க்கும் ,என இறை முடித்தது.

ஒரு சமயம் அரிஸ்டாட்டில் தம் மாணவருடன் ஆற்றின் கரைக்கு வந்தார். மாணவர்களைக் கரையில் நிற்க வைத்தவர், நான் ஆற்றின் அக்கறை வரையில் சென்று ஆற்றில் ஏதாவது சுழல்கள் உள்ளதா எனப் பார்த்து வருகிறேன் என்றார். அவர் ஆயத்தம் கொண்ட சமயம், அவரின் ஒரு மாணவர் தண்ணீரில் நீந்திச் செல்வதைக் கண்டார். மறு கரை வரை சென்று திரும்பிய மாணவர், குருவே, சுழல்கள் இல்லை., நாம் தைரியமாய் ஆற்றைக் கடக்கலாம் என்றார். அந்த நிலையில், அரிஸ்டாட்டில், உன்னைச் சுழல்கள் எடுத்து சென்றிருந்தால் என்னவாகி இருக்கும் என்றார். அதற்கு அந்த மாணவன், இந்த அலக்சாண்டர் போனால், ஆயிரம் அலேக்சாண்டர்களை உருவாக்கும் வல்லமை உள்ளவர் நீங்கள். ஆனால் ஒரு அரிதான குருவை இழந்தால் நாங்கள் பரிதவித்து

போவோம் என்றான். அப்படி ஆசிரியர் மாணவர் உறவு அமைவது நல்ல சமூகத்துக்குப் புது சுவாசத்தைக் கொணரும்.

**இவர்களே போற்றத்தக்கவர்கள்**

எது எப்படியிருந்தாலும், சிறந்த அர்ப்பணிப்பு உணர்வுடன், எந்த லாபநோக்கமும் இன்றி, பாடப்புத்தக அறிவு மட்டுமின்றி, பல்துறை பரந்த அறிவை மாணவர்களுக்கு வழங்கி, அவர்களின் உலகை விரியச் செய்து, உத்திரவாதமான எதிர்காலத்தைத் தொடர்ந்து வழங்கி வரும் ஆசிரியக் கண்மணிகள் கணிசமான அளவில் இருந்து, சமூக முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்து பாடுபட்டு வருகிறார்கள். கற்றல்-கற்பித்தல் என்பதே அவர்களின் தாரக மந்திரம். இத்தகைய ஆசிரியர்கள், சமூக உருவாக்கத்தின் மூல ஆதாரங்களாக திகழ்கிறார்கள்.

இவர்களைப் போன்றவர்களை போற்றவும், புகழவும், கவுரவிக்கவுமே ஆசிரியர் தினம். என்றென்றும் மாணவர் உலகில் நறுமணம் வீசிட செய்திடும் ஆசிரியர் உலகுக்கு ஆசிரியர் தின நல்வாழ்த்துக்கள்.. உங்கள் அரிய பணி தொடரட்டும். உலகில் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்பவர்கள், பிறரால் என்றென்றும் ஞாபகம் கொள்ளப் படுகிறார்கள்.


நன்றி




முகநூல் - வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை


I B.Sc (TFD)
3.3.2016
K.S.R COLLEGE OF ARTS & SCIENCE




EIFFEL
TOWER
BY
K.KAVIN KUMAR
Bsc Microbiology


கிருஷ்ணன்



